[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 14

பாராட்டுக்கள். பேரவை நடவடிக்கைகளை ஒளிபரப்புவதற்கு ஏற்ற வகையில் தினமும் ஒளிநாடாவில் பதிவு செய்த தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கும் பாராட்டுக்கள்.

இந்த அவையினுடைய அலுவல்கள் செம்மையாக நிறைவேறிட உளப்பூர்வமான ஈடுபாட்டுடன் எனக்குத் துணை நின்ற பேரவை முதன்மைச் செயலாளர் திரு. ஜானகிராமன் அவர்களுக்கும், பேரவைச் செயலாளர் திரு. இராசாராமன் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் ஒலிபெருக்கி மற்றும் இதர வசதிகள் செய்த பொதுப் பணித் துறையினருக்கும் பேரவைக் காவலர்களுக்கும் மற்றும் உதவிய அனைவருக்கும் பேரவையின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வவையின் எல்லா அலுவல்களையும் முன்னின்று சிறப்பாக நடத்தப் பெரிதும் துணையிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அவை முன்னவர் அவர்களுக்கும் தனித்தனியே நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்கு உங்கள் அனைவர் சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைக் கூறி முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஐ. கணேசன்: தலைவர் அவர்களே, கேள்வி கேட்டவர்கள் யார், எவ்வளவு பேர் கேட்டார்கள், இதையெல்லாம் சொல்ல வேண்டும். இது மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனுடைய முழு விவரம் இன்னும் வரவில்லை. அடுத்த கூட்டத் தொடரிலே அறிவிக்கச் சொல்கின்றேன்.

10. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்த அரசினர் தீர்மானம் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2001 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-38 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

73. சென்னை, உயர் நீதிமன்ற நீதிபதியான திரு. எஸ். தங்கராஜ் (ஓய்வு பெற்றவர்) அவர்களைத் தமிழ்நாடு வரி விதிப்பு தனி நடுவர் மன்றத்தின் தலைவராக நியமித்திருப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 9-8-2001 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு தனி நடுவர் மன்றச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 42/1992(23) (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

74. வணிக வரித் துறையில் 1999ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ஆம் நாளன்று உருவாகி, 1999ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2) வ.வ./11(1-2)/1999ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து